## சுருக்கம்

தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், 1978 – தலைமைச் செயலக துறைகளில் சில துறைகளின் பெயர் மாற்றம் – தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் 1978 மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்களின் முதலாம் விவர அட்டவணையில் திருத்தங்கள் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

### பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை

அரசாணை (நிலை) எண்.55

நாள்: 07.06.2021
பிலவ, வைகாசி - 24,
திருவள்ளுவர் ஆண்டு 2052.
படிக்கப்பட்டது:

அரசாணை (நிலை) எண். 267, பொது (சிறப்பு-பி) துறை,
நாள் 07.05.2021.

---

**ஆணை :**

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவுக் கூறு 166-ன் உட்கூறு 2 மற்றும் 3-ல் அளிக்கப் பெற்ற அதிகாரங்களின்படி தமிழ்நாடு ஆளுநர் தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் 1978 மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்களினை கீழ்கண்டவாறு திருத்தி அமைக்கின்றார்.

### திருத்தம்

(1) மேற்குறிப்பிட்ட விதிகளில்

பகுதி I முதலாம் விவர அட்டவணையில்

i. “பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை” என்ற தலைப்புக்கு பதிலாக “மனித வள மேலாண்மைத் துறை” என மாற்றீடு செய்யப்படுகிறது.

ii. “வேளாண்மைத் துறை” என்ற தலைப்புக்கு பதிலாக “வேளாண்மை - உழவர் நலத் துறை” என மாற்றீடு செய்யப்படுகிறது.

(தபியா.)

iii. அவ்வாறு மாற்றீடு செய்யப்பட்ட வேளாண்மை - உழவர் நலத் துறை என்ற தலைப்புக்கு கீழ் மாநிலப் பட்டியலில் இடம்பெறும் பொருள்கள் என்ற துணைத் தலைப்புக்கு கீழ் "உழவர் பயிற்சி மையம்" என்ற பொருண்மைக்கு பின்னர் "உழவர் நலம்" என்ற பொருண்மை சேர்க்கப்படுகிறது.

iv. "கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை" என்ற தலைப்புக்கு பதிலாக "கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் -மீனவர் நலத் துறை" என மாற்றீடு செய்யப்படுகிறது.

v. அவ்வாறு மாற்றீடு செய்யப்பட்ட கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் - மீனவர் நலத் துறை என்ற தலைப்புக்கு கீழ் மாநிலப் பட்டியலில் இடம்பெறும் பொருள்கள் என்ற துணைத் தலைப்புக்கு கீழ் "மீன்வளத்துறை" என்ற பொருண்மைக்கு பின்னர் "மீனவர் நலம்" என்ற பொருண்மை சேர்க்கப்படுகிறது.

vi. "சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை" என்ற தலைப்புக்கு பதிலாக "சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் – வனத் துறை" என மாற்றீடு செய்யப்படுகிறது.

vii. அவ்வாறு மாற்றீடு செய்யப்பட்ட சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் – வனத் துறை என்ற தலைப்புக்கு கீழ் மாநிலப் பட்டியலில் இடம்பெறும் பொருள்கள் என்ற துணைத் தலைப்புக்கு கீழ் வனத்துறை தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் "முந்திரித் தோட்டம்" என்ற பொருண்மைக்கு பின்னர் "காலநிலை மாற்றம்" என்ற பொருண்மை சேர்க்கப்படுகிறது.

viii. "மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை" என்ற தலைப்புக்கு பதிலாக "மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை" என மாற்றீடு செய்யப்படுகிறது.

ix. "தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை" என்ற தலைப்புக்கு பதிலாக "தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை" என மாற்றீடு செய்யப்படுகிறது.

x. அவ்வாறு மாற்றீடு செய்யப்பட்ட தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை என்ற தலைப்புக்கு கீழ் பொதுப் பட்டியலில் இடம்பெறும் பொருள்கள் என்ற துணைத் தலைப்புக்கு கீழ் "தொழிற்சாலை நடுவர் மன்றங்கள்" என்ற பொருண்மைக்கு பின்னர் "திறன் மேம்பாடு" என்ற பொருண்மை சேர்க்கப்படுகிறது.

xi. "பொதுப் பணித்துறை" என்ற தலைப்பின் கீழ்

(அ) மாநிலப் பட்டியலில் இடம்பெறும் பொருள்கள் என்ற துணைத் தலைப்பின் கீழ் பின்வரும் பொருண்மைகள் நீக்கப்படுகின்றன

கால்வாய்கள் (பக்கிங்காம் கால்வாய் பயன்பாடு பராமரித்தல் உட்பட)

நிலத்தடி நீர்த்திட்டம்

சிறுபாசனப் பணிகள் நீங்கலாக பாசனம் சிறப்பு சிறுபாசன பணிகள் உட்பட மற்றும் தூர்வாருதல் சீரமைப்புப் பணிகள்

மேட்டூர் நகரியக் குழுக்கள்

ஆறு பாதுகாப்புப் பணிகள்

—3

(ஆ) ஒன்றிய அரசின் அதிகாரப் பட்டியலில் இடம்பெறும் பொருள்கள் என்ற துணைத் தலைப்பின் கீழ் பின்வரும் பொருண்மை நீக்கப்படுகிறது

பொதுநலனுக்கு உகந்தது என்று சட்டத்தின் மூலம் நாடாளுமன்றம் அறிவித்துள்ள அந்த அரசுக்கு ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மாநிலங்களுக்கிடையேயான ஆறுகளையும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும் முறைப்படுத்துதல், மேம்படுத்துதல்.

xii. "சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை" என்ற தலைப்புக்கு பதிலாக "சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை" என மாற்றீடு செய்யப்படுகிறது.

xiii. அவ்வாறு மாற்றீடு செய்யப்பட்ட "சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை" என்ற தலைப்புக்கு கீழ் மாநிலப் பட்டியலில் இடம்பெறும் பொருள்கள் என்ற துணைத் தலைப்புக்கு கீழ் "பாலர் பள்ளி குழந்தைகள் நலன்" என்ற பொருண்மைக்குப் பின்னர் "மகளிர் உரிமை" என்ற பொருண்மை சேர்க்கப்படுகிறது.

xiv. "தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை" என்ற தலைப்பும் அதில் அடங்கிய பொருண்மைகளுக்கும் பின்னர் கீழ்காணும் தலைப்பும் அதன் பொருண்மைகளும் சேர்க்கப்படுகின்றன.

## நீர்வளத் துறை

மாநிலப் பட்டியலில் இடம் பெறும் பொருள்கள்

கால்வாய்கள் (பக்கிங்காம் கால்வாய் பயன்பாடு பராமரித்தல் உட்பட)
குற்றவியல் முறையீடு
நிலத்தடி நீர்த்திட்டம்
சிறுபாசனப் பணிகள் நீங்கலாக பாசனம் சிறப்பு சிறுபாசன பணிகள் உட்பட மற்றும் தூர்வாருதல் சீரமைப்புப் பணிகள்
மேட்டூர் நகரியக் குழுக்கள்
அரசுப் பணிகள் – துறை சம்பந்தப்பட்ட பணிகளின் சட்டப்படிக்கான விதிகள் – அவ்விதிகளில் மாற்றம் செய்தலும் திருத்தம் செய்தலும்.
ஆறு பாதுகாப்புப் பணிகள்
அரசுப் பணியாளர்கள் மீது வழக்கு தொடர அனுமதியளித்தல்.
நீர் வளம்

……4

ஒன்றிய அரசின் அதிகாரப் பட்டியலில் இடம்பெறும் பொருட்கள்

மாநிலங்களுக்கு இடையிலான ஆறுகளையும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும் முறைப்படுத்துதல், மேம்படுத்துதல். பொதுநலனுக்கு உகந்தது என்று சட்டத்தின் மூலம் நாடாளுமன்றம் அறிவித்து ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளை முறைபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.

(2) பகுதி II தலைமைச் செயலக அறிவுறுத்தங்களில், எவ்விடங்களில் எல்லாம் “பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை” மற்றும் “பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பணியாளர்) துறை” என்று வருகிறதோ, அவ்விடங்களில் எல்லாம் “மனித வள மேலாண்மைத் துறை” என மாற்றீடு செய்யப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ. இறையன்பு
அரசு தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
அனைத்து அரசுச் செயலாளர்கள், தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
அனைத்துத் தலைமைச் செயலக துறைகள், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
அனைத்து துறை தலைமைகள்
ஆளுநரின் செயலாளர், சென்னை - 22
முதலமைச்சரின் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

<u>நகல்</u>
அனைத்து அமைச்சர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்கள்,
சென்னை – 600 009.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 600 009.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 600 009.
அரசு செயலாளரின்முதன்மை தனிச் செயலர்,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,
சென்னை – 600 009,
அனைத்து அலுவலர்கள் மற்றும் பிரிவுகள்,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, (நி.சீ II.)துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009 (அரசு வலைதளத்தில் வெளியிட)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்